
December 2019

# Coastal Watch

## கடலோரப் பார்வை



# Coastal Heritage Matters

Coastal Watch

Monthly Coastal update from ICT

Vol. I Issue 6 December 2019

Welcome to Coastal Watch!

The Coastal watch carries the coastal stories about the coastal life experiences. Coastal community shares their own life experiences. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project- Internews project titled “Voice of Vulnerable”. This is the sixth issue of the magazine titled “Coastal Watch”.

The articles in this magazine are not written by journalist or expert in the media field. The articles are written by community journalism volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This issue carries about eight articles. The articles in this issues talks about a coastal village called Vettaikaraniruppu. Farmers shares their cultivation pattern of groundnut cultivation. A Community Volunteer shares about the changing childhood lifestyle. A married women from the coastal village shares her feelings about her husband who is working in abroad. This issue also carries articles on local coastal car festival, existing siddha hospital in the coastal village, usage of tamarind tree and banking facility in the coastal village.

Thanks in advance for your support!

Keep Read and Reflect….

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரை போல வருமா? 1

2. கடல் மண்ணில் இலாபம் தரும் கடலை சாகுபடி... 3

3. வெளிநாட்டில் கணவர்- மனைவியின் மனநிலை... 5

4. மாறிவிட்டது குழந்தை பருவம்... 7

5. எங்கள் ஊர் தேர்திருவிழா... 9

6. இன்றும் சித்த(ரும்) மருத்துவம்... 11

7. புளியமரம் ஒன்றும் எளிய மரமல்ல... 13

8. எங்கள் ஊர் வங்கி... 15

DHAN Foundation

1A, Vaidyanathapuram East

Kennet Cross Road

Madurai 625 016. Tamil Nadu, INDIA

Tel.: +91 452 2302500; Fax: 2602247

Email: dhanfoundation@dhan.org

# சொர்க்கமே என்றாலும் அது நம்ம ஊரை போல வருமா?

* அரிபிரியா

எங்கள் ஊர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு கடலோர கிராமமான வேட்டைக்காரனிருப்பு ஆகும். முன்னொரு காலத்தில் எங்கள் ஊரில் ஒரு பெரிய காடு இருந்ததாகவும், அந்தக் காடுகளில் வனவிலங்குகள் அதிக அளவில் இருந்ததாகவும், அந்த விலங்குகளை வேட்டையாடும் பொருட்டு அதிக அளவில் வேடர்கள் தங்கி வேட்டையாடினார்கள் என்றும் கூறப்படுகிறது. அதனால் அந்தப் பகுதி வேட்டைக்காரர்கள் இருப்பு என அழைக்கப்பட்டது அதுவே காலப்போக்கில் வேட்டைக்காரனிருப்பு என்று அழைக்கப்படுகிறது.

எங்கள் ஊரில் மொத்தம் 1,600 குடும்ப அட்டைகள் உள்ளது. சுமார் 8,500 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எங்கள் ஊரில் வாழும் மக்கள் அனைவருமே ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு மற்றும் விவசாயத்தையே தங்கள் வாழ்வாதாரமாக கொண்டு கடினமாக உழைத்து வருகின்றனர். சுமார் 1,500 குடும்பங்களில் ஆடு மாடுகள் வளர்த்து வருகின்றனர். எங்கள் ஊரில் இந்து, கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய மூன்று மதத்தினை சார்ந்த மக்களும் சகோதர தன்மையுடன் வாழ்ந்து வருகிறோம். சிவன், மாரியம்மன், வீரன், அய்யனார், பிள்ளையார், காதலியம்மன் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் 13 உள்ளன. அதே போல், 1 மசூதியும் 1 தேவாலயமும் எங்கள் ஊரில் இருக்கின்றன.

எங்கள் ஊர் ஓர் கடலோர கிராமம். எங்கள் ஊரில் அரிச்சந்திரா என்னும் நதி ஒன்று உள்ளது. அதில் பெரும்பாலும் உப்பு தண்ணீர் தான் ஓடிக்கொண்டு இருக்கிறது அதனால் அது சாகுபடிக்கு உகந்ததாக இருக்காது. இருப்பினும் அந்த நீரில் மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள். இந்த நதி கடலுடன் இணைவதால் எப்பொழுதும் தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். எங்கள் ஊரில் குடிதண்ணீருக்காக ஆழ்துளைக் கிணறு தண்ணீரையே பயன்படுத்துகின்றனர்.

எங்கள் ஊரான வேட்டைக்காரனிருப்பிலேயே எங்கள் மக்களுக்கு தேவையான ஆடைகள் அணிகலன்கள் முதல் சமையல் பாத்திரங்கள் மளிகை சாமான்கள் என அனைத்து பொருட்களும் கிடைக்கின்றன. எங்கள் ஊரில் பல கடைகள் உள்ளன. இதில் 2 பாத்திரக் கடைகளும் 5 ஜவுளிக் கடைகளும் 4 இணைய சேவை மையங்களும் 2 காய்கறிக் கடைகளும் 3 பூக் கடைகளும் 7 ஹோட்டல்களும் 2 உரக்கடைகளும் 4 பழக்கடைகளும் 12 மளிகைகடைகளும் 2 பாசிமணி கடைகளும் அடங்கும்.



* அரிபிரியா, வேட்டைக்காரனிருப்பு

எங்கள் ஊரில் இரண்டு வகையான மண் வகைகள் காணப்படுகின்றன. முதலாவதாக கடற்கரையை ஒட்டி இருக்கும் பகுதிகளில் வண்டல் மண்ணும் மற்றும் மானாவாரி நிலங்களில் காணப்படும் களிமண்ணும் என்று வகைப்படுத்தலாம். சுமார் 1,200 குடும்பங்கள் விவசாயம் செய்து வருகின்றனர். எங்கள் ஊரில் நெல், நிலக்கடலை மற்றும் பலதரப்பட்ட காய்கறிகளை விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது எங்கள் ஊரில் மானாவாரி நிலங்களில் முந்திரி, தென்னை, மா, நெல்லி, வாழை, யூகலிப்டஸ், சவுக்கு, பனை, வேம்பு, புளியமரம், முருங்கை போன்ற பல்வேறு வகையான மரங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன.

அதேபோல் வண்டல் மண் நிறைந்த இடங்களில் வேர்க்கடலை, உளுந்து, மொச்சை, பாசிப்பயிறு, துவரை போன்ற பயிறு வகைகளும் மரவள்ளிக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு போன்ற கிழங்கு வகைகளும் அதிக அளவில் எங்கள் பகுதிகளில் பயிரிட்டு வருகின்றனர். கூடுதலாக காய்கறிப் பயிர்களான கத்தரிக்காய், வெண்டைக்காய், மிளகாய், தக்காளி, பரங்கிக்காய், புடலங்காய், பீர்க்கங்காய், சுரைக்காய், பாகற்காய், சுண்டைக்காய், தர்பூசணி, வெண்பூசணி, மணத்தக்காளி தும்மட்டிக்காய் போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டு வருகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து காய்கறிகளும் வண்டல் மண் உடைய வேளாண் நிலங்களில் தான் பயிரிட முடியும். களிமண் தரை கொண்ட மானாவாரி நிலங்களில் மழைக்காலங்கள் ஒட்டி ஒரு போகம் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது, காரணம் நீர் பற்றாக்குறை. மேலும் ஒருபோக சாகுபடியில் முதன்மையான பயிராக நெல் பயிரிடப்பட்டு வருகிறது. நெல் பயிரிடப்படும் போது வரப்புகளில் உளுந்து, பாசிப்பயிறு போன்ற பருப்பு வகைகள் பயிரிடப்படுகின்றன. நெல் அறுவடையை தொடர்ந்து எள் மற்றும் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

எங்கள் ஊரில் பெரும்பாலான மக்கள் தங்களுக்குத் தேவையான காய்கறிகளை தங்கள் வயல்களிலேயே உற்பத்தி செய்து கொள்கின்றனர். மேலும் எலுமிச்சை, கொய்யா, மாதுளை, வாழை, கருவேப்பிலை போன்ற மரங்களும் குறைந்த அளவில் வீட்டுத் தோட்டங்களில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. எங்கள் ஊரில் சுமார் 800 குடும்பங்களில் வீட்டுத் தோட்டம் அமைத்து பராமரிக்கப்படுகிறது.

எங்கள் ஊரில் சிலர் கடலிலும் ஆற்றிலும் அலத்திலும் மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். சுமார் 300 குடும்பங்கள் உள்நாட்டு மீன்பிடி தொழில் சங்கத்தில் இணைந்து உள்ளனர்.

இவ்வாறு எங்கள் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் நல்ல இயற்கைச் சூழலினாலும் உழைப்பினாலும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர்.





# கடல் மண்ணில் இலாபம் தரும் கடலை சாகுபடி

* இராமமூர்த்தி

என்பெயர் இராமமூர்த்தி. நான் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள விழுந்தமாவடி கிராமத்தில் கடந்த 68 வருடங்களாக வாழ்ந்து வருகிறேன். நான் என்னுடைய 14 வயதிலிருந்தே கடலை மற்றும் மற்ற பயிர்களைச் சாகுபடி செய்து வருகிறேன். அதாவது சுருக்கமாக சொல்லப்போனால் குடத்திலே தண்ணீர் பிடித்து கடலை செடிகளுக்கு ஊற்றிய காலம் முதல் தற்போது ஆழ்துளை போர் வைத்து தண்ணீர் இறைக்கும் காலம் வரை எனக்கு கடலை சாகுபடியில் மிகுந்த அனுபவம் உண்டு.

இந்தக் கட்டுரையின் மூலம் கடலை சாகுபடியில் எப்படி லாபம் ஈட்டலாம் என்பதை கூற விரும்புகிறேன். கேளுங்கள்.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் ஆடு மாடுகளை பட்டியில் அடைத்து பின்னர் அதன் உரத்தை அந்த இடத்திலேயே காயவைத்து ஏர் உழுது சாகுபடி செய்து வந்தோம். அப்போது பெருவாரியான நோய் தாக்குதல்கள் இல்லாததாலும் கடலைப் செடிகள் நன்கு வளர்ந்து செழிப்புடன் காணப்பட்டதாலும் நல்ல மகசூல் கிடைத்தது. எங்களுக்கு எங்கள் பகுதிகளில் கடலை சாகுபடியில் லாபம் மட்டுமே கிடைத்து வந்தது.

நான் பொதுவாக கடன் வாங்கி எனது ஒன்றரை ஏக்கர் நிலத்தில் கடலை சாகுபடி செய்த பிறகு கொடுத்த கடனை அடைத்துவிட்டு மீதம் உள்ள பணத்தை இலாபமாக கருதி ஏற்றுக் கொள்வேன்.

கடலை சாகுபடி செய்ய இருக்கும் வயல் நிலத்தை நன்கு உழுது மண்ணை தயார் செய்யவேன். அதன்பிறகு தண்ணீர் படித்துவிட்டு அதன்மேல் சேயல் எனப்படும் இரக கடலையை விதைத்து மீண்டும் அதன் மேல் மற்றொரு தண்ணீர் விடுவேன். விதைத்த கடலை விதைகள் ஆனது சுமார் ஆறு முதல் ஏழு நாட்களில் முளைத்து மண்ணில் இருந்து வெளிவரும். அதன் பிறகு கோத்தாரி உரம் கொடுப்பேன். அதனைத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சுவேன். 30 நாட்களுக்குள் அனைத்து கடலை செடிகளிலும் பூ வைக்க ஆரம்பித்துவிடும். பிறகு ஒவ்வொரு கடலை செடியை சுற்றியும் சிறிதளவு ஜிப்சம் அளித்து



* இராமமூர்த்தி, விழுந்தமாவடி

மேல் மண்ணை கிளறி விடுவேன். இவ்வாறு செய்வதன் மூலம் கடலை விழுதுகள் நன்கு இறங்கி பிஞ்சு வைக்கும். இதை தொடர்ந்து இயற்கை உரமான மாட்டு சாணத்தை கொடுப்பதன் மூலம் செடிகள் நன்கு வளர்ந்து அறுவடைக் காலங்களில் தயார் நிலையில் இருக்கும்.

நான் விளைவிக்கும் கடலை ரகமானது 90 முதல் 100 நாட்களில் அறுவடைக்கு தயாராக இருக்கும். கூலியாட்களை வைத்து அறுவடை செய்த கடலைகளை காயவைத்து விற்பேன். அதன் தண்டு போன்ற காய்ந்த பாகங்களை அரித்து கட்டுகளாக கட்டி ஒரு கட்டு ரூ. 300 என்று கால்நடை வளர்ப்பவர்களுக்கு விற்பனை செய்து விடுவேன்.

எனது விவசாயத்தின் வரவு செலவுகள் என்று பார்த்தோமேயானால், எனக்கு இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது அதில் ஒன்றரை ஏக்கர் கடலை சாகுபடி செய்துவருகிறேன். இதற்கு, 115 கிலோ கடலைப்பருப்பு விதை தேவைப்படுகிறது. ஒரு கிலோ கடலைப் பருப்பின் விலை ரூ. 140 இதன் மூலம் எனக்கு ஆகும் செலவு ரூ. 16,100. இந்த கடலை விதைகளை நடுவதற்கு 15 கூலி ஆட்கள் தேவைப்படுவார்கள் ஒரு கூலி ஆளுக்கு ஒரு நாளைக்கு ரூ. 250 கூலி வீதம் 15 ஆளுக்கு மொத்த செலவு ரூ. 3,750. உரம் மற்றும் நிலம் உழவு செலவு ரூ. 20,000. ஆக மொத்தம் எனது கடலை சாகுபடி செலவு ரூ. 39,850.

என்னுடைய ஒன்றரை ஏக்கர் நிலத்தில் இருந்து மொத்தம் 1,350 கிலோ கடலை விளைவித்தேன் இதன்மூலம் எனக்கு வருமானம் ரூ. 47,250 கிடைத்தது. காய்ந்த தலைகள் 45 கட்டுகள் வந்தது ஒரு கட்டுக்கு ரூ. 300 வீதம் ரூ. 13,500 கிடைத்தது. இவ்வாறாக கிடைத்த ரூ. 60,750 வரவில் ரூ. 39,850 செலவு போக ரூ. 20,900 நிகர லாபமாக எனக்கு கிடைத்தது.

ஆக, கடலை சாகுபடியை பொறுத்தவரையில் எனக்கு லாபமே கிடைக்கிறது என்று பெருமையாக கூறுவேன். இது போல் நீங்களும் கடலை சாகுபடி செய்து கண்டிப்பாக இலாபம் ஈட்டலாம்.



# வெளிநாட்டில் கணவர் – மனைவியின் மனநிலை

* துர்கா

சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா? என் நாடு என்றாலும் அது நம் நாட்டுக்கு ஈடாகுமா?

ஆம் இது உண்மைதான். என் பெயர் துர்கா. என்னுடைய கணவர் பெயர் ராஜா. என்னுடைய கணவர் திருமணத்திற்கு முன் ஐந்து ஆண்டுகள் சிங்கப்பூரில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அதற்குப் பின் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று திருவாரூர் மாவட்டத்தை சேர்ந்த திருமக்கோட்டை அருகே உள்ள தன் சொந்த ஊருக்கு வந்து என்னை திருமணம் செய்து கொண்டார். என்னுடைய கணவருக்கு தற்போது 32 வயது ஆகிறது. அவர் மின் மற்றும் மின்னணுவியல் பொறியியல் பாடப் பிரிவில் பட்டயக் கல்வி பயின்றார். நான் தகவல் தொழில்நுட்பத் துறையில் இளநிலை பட்டப்படிப்பு முடித்துள்ளேன். எங்களுடைய திருமணமானது ஆன்லைனில் வரன் பார்த்து தான் அமையப்பெற்றது.

எங்களது திருமணம் முடிந்து சுமார் எட்டு மாதங்கள் தான் அவர் சொந்த ஊரில் இருந்தார். திரும்பவும் அவர் வேலைக்காக வெளிநாட்டிற்குச் செல்ல நேரிட்டது. அப்போது எனது வளைகாப்பு முடிந்து ஒரு மாதம் கழித்து என்னை என் பெற்றோர் வீட்டில் கொண்டு வந்து விட்டு விட்டு தன் தாயாருடன் சிங்கப்பூர் சென்றுவிட்டார். சிறுவயதிலிருந்து தன்னை வளர்த்த தாயாரும் தன்னுடன் இருக்க வேண்டும் என்ற காரணத்துக்காக எனது மாமியாரையும் அவர் சிங்கப்பூர் அழைத்துச் சென்றார். அவர் வெளிநாடு சென்றதற்கு காரணங்கள் நிறைய சொல்லலாம். இருப்பினும் எங்களுக்கு என்று ஒரு தனி வீடு கட்ட வேண்டும் அதற்காகவும், அதற்காக வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று சிங்கப்பூர் சென்றுவிட்டார்.

எங்கள் ஊர் சற்று பின்தங்கிய கிராமம். அதிலும் படித்தவர்களுக்கு வேலையே கிடையாது. அப்படி ஏதேனும் தொழில் கல்வி பயின்று வேலையில் சேர்ந்தாலும் ஊதியம் அதற்கு ஏற்றார் போல் இல்லை. எங்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தான். எங்களுடைய செல்வம் ஷர்வின். நானும் என்னுடைய பெற்றோரும் தான் எங்களுடைய குழந்தையை வளர்த்து வருகிறோம்.

எனது கணவர் அவருடைய வேலை முடிந்த பிறகு போனில் வாட்ஸ் அப் மூலம் எங்கள் ஷர்வினை பார்த்து வருகிறார். எனது கணவர்



* துர்கா, வேட்டைகாரனிருப்பு

சிங்கப்பூரில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது என்னுடைய பாட்டி இறந்து விட்டார். அவரால் வர இயலா விட்டாலும் தன்னுடைய நெருங்கிய சொந்தங்களை எங்கள் ஊருக்கு அனுப்பி எங்கள் வழக்கத்தின்படி கோடி போட்டார்.

நேரில் பார்த்து தன் குழந்தையை கொஞ்ச முடியவில்லையே என்று பல தருணங்களில் அவர் கவலைப்பட்டதும் உண்டு. என்னதான் போனில் பார்த்து பேசினாலும் அருகிலிருந்து இந்த மழலையின் பேச்சும், செல்ல சிரிப்பும், அதன் பிஞ்சு விரல்கள் நம் கையில் கோர்த்த அரவணைப்பும், தவிழும் அழகும், மெல்ல அடியெடுத்து வைக்கும் காட்சியும், இதை எல்லாம் என் கணவர் கண்டிப்பாக தவறவிட்டு விட்டார் என்றுதான் கூற வேண்டும்.

அது மட்டுமல்லாமல் உறவினர்கள் அவர்களது சுபநிகழ்ச்சிகளுக்கு கூட வர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. சுபநிகழ்ச்சிகளுக்கு நான் மட்டும் தனியே செல்ல நேரிடும், திருமணத்தில் எல்லோரும் தங்கள் கணவர் மற்றும் குழந்தைகளுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்வர், அப்போது நான் என் கணவர் கண்டிப்பாக என்னுடன் இருந்திருக்க வேண்டும் என்று நினைத்ததுண்டு. ஆனால் நான், ‘‘அவர் ஒரு லட்சியத்திற்காக வெளிநாடு சென்றிருக்கிறார், இன்னும் சிறிது காலத்தில் திரும்பி வந்துவிடுவார் என்று சொல்லி எனது மனதை நானே தேற்றிக்கொள்வேன்.

எங்களுக்கு சிறிதளவு கடன் இருக்கிறது அதை அடைக்கவும், வீடு கட்டவும், நாமும் பிறர் போல் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற இலட்சியத்திற்காக எனது கணவர் வெளிநாடு சென்றிருக்கிறார்.

‘‘ஊரோடு ஒத்து வாழ்’’ என்று பழமொழி சொல்வார்கள். எங்கள் ஊரில் திருமணம் மற்றும் திருவிழாக்கள் நடந்தால், எங்கள் ஊரில் இருக்கும் மக்கள், சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து வரும் மக்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் என்று எல்லோரும் வருவார்கள். எங்கள் திருமணத்திற்கும் அப்படித்தான் வந்தார்கள். நான் எங்கள் ஊரில் எங்கள் சொந்தக்காரர்கள் மற்றும் எங்கள் ஊர் சுபநிகழ்ச்சிகளுக்கு தவறாமல் சென்றுவிடுவேன்.

ஆனால் இதேபோன்று என் கணவர் ஊரில் அவருடைய சொந்த பந்தங்களின் வைபவங்களில் மற்றும் சுப நிகழ்ச்சிகளில் எல்லாம் என்னால் தனியாக கலந்து கொள்ள இயலவில்லை. இதனால் அவர்களிடையே நான் அறிமுகமற்றவளாக இருந்து வருகிறேன். இந்த சூழலில், சரியான புரிதல்கள் இல்லாமல், எனக்கும் என் கணவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் வருவதும் உண்டு. இன்னும் சில தருணங்களில் சண்டையும் கூட வரும் காரணங்கள் பல இருக்கின்றன. அவர் அழைக்கும்போது செல்போன் எடுத்துப் பேசமுடிவதில்லை, அப்போதுதான் எங்களுடைய குழந்தை அழுது கொண்டிருப்பான், சில நேரங்களில் தூங்கிக் கொண்டிருப்போம், சில நேரங்களில் ஏதேனும் சேட்டை செய்து கொண்டிருப்பான், நான் எனது குழந்தையை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பேன், இதை ஏதும் புரியாமல் அவர் என்னை கடிந்து கொண்டிருப்பார்.

எங்கள் குழந்தைக்கு தற்போது ஒன்றரை வயது முடிவடைந்து இருக்கிறது. நான் அவருக்கு எங்கள் குழந்தையின் வளர்ச்சியைக் காட்டுவதற்காக போட்டோவை மட்டும் வாட்ஸ்அப் வழியாக அனுப்புவேன். வெளிநாட்டு வாழ்க்கை பணம் ஆடம்பரம் மட்டும்தான் கொடுக்கும் ஆனால் நம் நாடாக இருந்தால் அன்பு, பாசம், உறவு, ஒற்றுமை என்று அனைத்தையுமே கொடுக்கும். அப்படியே அயல் நாட்டிற்கு சென்றாலும் பணத்தை சம்பாதித்துக் கொண்டு நம் நாட்டிற்கு வந்து நம் ஊரோடும் நம் மக்களோடும் வாழ வேண்டும். நானும் காத்துக் கொண்டிருக்கிறேன் என் கணவர் வருவார் என்றும் எங்கள் லட்சியம் நிச்சயம் நிறைவேறும் என்றும். இந்தக் கட்டுரையை எனது கணவர் ராஜாவுக்கும் என் மகன் ஷர்வினுக்கும் சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

# மாறிவிட்டது குழந்தை பருவம்

* காவியா

என் பெயர்காவியா எனக்கு நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வேட்டைக்காரனிருப்பு தான் சொந்த ஊர். இந்த காலத்தில் உள்ள சிறுவர் சிறுமியர் அனைவரும் ஸ்மார்ட் போன்களில் வாட்ஸ்அப், ஃபேஸ்புக் மற்றும் இதர விளையாட்டுகள் விளையாடுவதிலையே மும்முரமாக இருக்கிறார்கள். மேலும் பெற்றோர்களும் அதனை ஊக்குவிக்கும் விதமாக தங்கள் குழந்தைகளுக்கு அவர்கள் கேட்காமலேயே தங்கள் குழந்தைகளை சமாதானப்படுத்தும் விதமாக தங்கள் கையில் இருக்கும் ஸ்மார்ட்போன்களை தந்து விடுகிறார்கள். இவ்வாறாக இருக்கும் சூழலில் குழந்தைகளுக்கு உடலளவிலும் மனதளவிலும் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டுவர இயலாது. மேலும் குழந்தை பருவத்தில் தான் குழந்தைகளின் மூளையும் மற்ற உடல் பாகங்களும் மிகுந்த வளர்ச்சி அடைவதாகக் கூறப்படுகிறது. இப்படி இருக்கும் பட்சத்தில் இது போன்ற பழக்கங்கள் குழந்தைகளுக்கு எந்த ஒரு நன்மையையும் பயக்காது.

ஆனால் நாங்கள் எங்கள் குழந்தை பருவத்தில் விளையாண்ட கூத்து இருக்கே அதை விவரிக்க வார்த்தைகளே இல்லை. இருந்தாலும் நாங்கள் எங்கள் குழந்தை பருவத்தில் விளையாண்ட சில விளையாட்டுகள் பற்றி இங்கு கூற விரும்புகிறேன்.

சுமார் பத்து முதல் பதினைந்து பேர் சேர்ந்து ஒரு குழுவாக பிற்பகல் 2 மணியளவில் மானாவாரி நிலங்களுக்கு எங்கள் வீட்டு ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு அழைத்துச் செல்வோம். அவ்வாறு செல்கையில் மானாவாரியில் கிடைக்கும் புல்பூண்டு செடிகளை அறுத்து சின்னதொரு வீடு போன்ற அமைப்பினை செய்து அதில் சிறு சிறு அறைகள் அமைத்து ஒரு அறைக்கு இரண்டு நபர்கள் வீதம் உட்கார்ந்து எங்கள் மாலைப் பொழுதைக் கழிப்போம்.

இதனுடன் எங்கள் வீட்டை எங்கள் அம்மா எப்படி பராமரித்து வருகிறார்களோ அதே போல் நாங்களும் நாங்கள் உருவாக்கிய செயற்கை அறைகளை சுத்தமாக வைத்திருப்போம். சில சமயம் கூட்டாஞ்சோறு சமைக்கும்போது எங்கள் குழுவில் உள்ள அனைவரும் தங்கள் வீடுகளில் இருந்து அரிசி பருப்பு என சமையலுக்குத் தேவையான அனைத்து பொருட்களையும்



* காவியா, வேட்டைகாரனிருப்பு

எடுத்துக்கொண்டு சிறு பாத்திரங்களில் சமைத்து சாப்பிடுவோம். அவ்வாறு சமைக்கும் வேலையில் அதில் உப்பு உரப்பு இருக்கிறதா இல்லையா என்றெல்லாம் தெரிந்து கொள்ளாமலேயே நாங்கள் சாப்பிடுவோம். இவ்வாறு நாங்கள் சமைத்து சாப்பிடும் கூட்டாஞ்சோறு எங்களுக்கு ஒரு தனி சந்தோசத்தை கொடுத்தது.

இதனை தொடர்ந்து மாலை வரை சிறிது நேரம் எங்களுக்கு ஏற்ற உடல் வலிமை மற்றும் மன வலிமை தரக்கூடிய விளையாட்டுகளை விளையாடி வந்தோம். இந்த விளையாட்டுகளில் ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் எந்த ஒரு பாகுபாடுமின்றி இருபால் இனத்தினரும் ஒன்றாகவே விளையாண்டு வந்தோம்.

தட்டான் நீட்சி, பச்சை குதிரை, சில்லி கோடு, நாடு பிரித்தல், ஒத்த கை ரெட்ட கை, புட்டு, நொட்டி கோடு, கண்ணாமூச்சி, ஒளியங் கண்டு, ஓடிப் பிடித்தல் ஆகியவை எங்கள் விளையாட்டு பட்டியலில் உள்ள சில விளையாட்டுகளே. இது தவிர பனை மரத்தில் ஏறி அதில் உள்ள



பனம் பழத்தை எடுத்து சுட்டு சாப்பிடுவோம். எனக்கு வேண்டும் உனக்கு வேண்டும் என்று சாப்பிடும்போது சண்டை வரும், இவ்வாறு வரும் சண்டையில் யாருக்காவது பனம் பழம் கிடைக்கவில்லை என்றால் நாங்கள் பகிர்ந்து சாப்பிடுவோம்.

இதுபோல் மானாவாரி வயலில் கிடைக்கும் பூண்டு செடிகளை கொண்டு சமையல் செய்து தொட்டுக்கொள்ள இறந்துபோன நண்டு குடுவைகளை எடுத்து சமைப்போம். மரத்திலுள்ள காய்கள் பூக்கள் இலைகளை எடுத்து நாங்கள் எங்கள் வழக்கில் சமையல் செய்வோம்.

இவ்வாறு நாங்கள் செய்யும் பண்டங்களை நாங்கள் சாப்பிட மாட்டோம் மாறாக நாங்கள் கூட்டாக சாப்பிடுவது போல் ஒரு பிம்பத்தை உருவாக்குவோம். நாங்கள் எங்களுடைய விளையாட்டுகளில் மூழ்கி இருக்கும் சமயத்தில் ஆடு மாடுகளை மறந்து விடுவோம். அவை அருகிலுள்ள எள்ளு, உளுந்து ஆகிய மானாவாரி வயல்களில் பயிர் செய்யப்பட்ட பகுதிகளில் நுழைந்து பாதிப்பை ஏற்படுத்திவிடும். அவ்வாறு நடக்கும் பட்சத்தில் நிலத்தின் சொந்தக்காரர்கள் எங்களது ஆடு மாடுகளை பிடித்து வைத்துக் கொள்வர். நாங்கள் ஆடு மாடு இல்லாமல் வீட்டிற்கு போகும் போது எங்கள் அம்மா எங்களை ஊர் முழுக்க சுற்றி வரும்படி அடிப்பார்கள். இதையெல்லாம் நாங்கள் ஒன்றும் பெரியதாக எடுத்துக் கொண்டதில்லை. எப்பவும் போல் எனக்கு சோறு வேண்டும் அம்மா என்று சொல்லிக் கொண்டு கடந்து சென்றுவிடுவோம். இப்படி எல்லாம் நாங்கள் எங்கள் சிறுவயதில் விளையாடிய காலம் போய், இப்பொழுது உள்ள குழந்தைகள் அனைவரும் ஸ்மார்ட் போன்களிலேயே தங்களுக்கான அறைகளை ஏற்படுத்திக்கொண்டு அதற்குள் தங்கள் இளம் வயதினை வைத்து தாளிட்டுக் கொண்டு தங்கள் உடல் மற்றும் மனவலிமையை மேம்படுத்திக் கொள்ளா வண்ணம் ஒரு சூழல் தற்போது உருவாகியுள்ளது.

# எங்கள் ஊர் தேர்திருவிழா

* புவனா



திருவிழா என்றாலே அனைவருக்கும் மிகவும் குதுகோலம் தான், அதிலும் தேர் திருவிழா என்றால் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் அனைவருக்கும் குதுகோலம் தான். உலகில் எந்த மூலையில் இருப்பினும், தங்கள் ஊரின் தேர் திருவிழாவை காண, அனைவரும் ஆசைப்படுவதுண்டு, எங்கிருந்தாலும், தேர் திருவிழா பற்றிய தங்களது நினைவலைகளை அசை போடுவதுண்டு. இங்கே செல்வி புவனா, வேதாரண்யம் ஊரின் தேர் திருவிழா பற்றி தனது நினைவலைகளை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

என் பெயர் புவனா. எனக்கு சொந்த ஊர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் தென்கோடியில் அமைந்துள்ள வேதாரண்யம் நகரம். பொதுவாக தமிழ்நாட்டில் தேர்த்திருவிழா என்று சொன்னாலே பெரும்பாலோனோருக்கு நினைவில் வருவது திருவாரூர் தேர் தான். அதே போல் எங்கள் ஊரிலும் வருடத்திற்கு ஒருமுறை வேதாரண்யேஸ்வரர் கோவிலின் தேர் திருவிழாவும் மிகவும் பிரசத்தி பெற்றது. திருவாரூர் தேருக்கு பல சிறப்புகள் இருப்பது போலவே எங்கள் ஊர் தேருக்கும் நிறைய சிறப்பம்சங்கள் இருக்கின்றன. எங்கள் ஊர் தேரை இழுக்கும் அன்றைய தினம் வேதாரண்யம் வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சிறப்பு விடுமுறை அளிக்கப்படும். எங்கள் வேதாரண்யேஸ்வரர் இருப்பதை காணும் பொருட்டு அன்றைய தினம், வேதாரண்யம் நகரை சுற்றி உள்ள அனைத்து பகுதிகளிலும் இருந்து பொது மக்கள் அணி திரண்டு வருவர். ஆலயத்தை சுற்றி வரும் மக்கள் எல்லோரும் பக்தியோடு தேரின் வடம் கயிற்றை பக்தியோடு பிடித்து இழுப்பார்கள். நாங்கள் சின்னஞ் சிறு பிள்ளைகளாக இருந்த போதிலிருந்தே எங்கள் பகுதியில் இருந்த அனைவரும் வேதாரண்யேஸ்வரர் தேர் பார்க்க, இழுக்க வருடாவருடம் பயபக்தியோடு இத்திருக்கோயிலுக்குச் செல்வோம்.

பெரும்பான்மையானோர் வேதாரண்யேஸ்வரர் தேரை இழுக்கும் போது ஏதேனும் ஒரு வேண்டுதல் வைத்து கொண்டு இருப்பார்கள். சிலர் வாழ்வில்

* புவனா, வேதாரண்யம்



ஏதேனும் தெரியாமல் தப்பு செய்திருந்தால் அதை மன்னிக்கும் பொருட்டு இழுப்பார்கள். சில நேரங்களில் வேதாரண்யேஸ்வரர் வேகமாக ஓடிவரும் நிலையில் எவரேனும் தெரியாமல் இடையில் மாட்டிக் கொண்டால் அவர்களின் நிலைமை மோசமாகிவிடும். இதுபோன்ற அசம்பாவிதங்கள் அரங்கேறியதும் உண்டு. வெகு சில நேரங்களில் எங்கள் ஊர் தேர் ஒரு அடியேனும் நகராமல் பக்தர்கள் மிகுந்த சிரமப்பட்டு வடம் பிடித்து இழுத்து வருவார்கள். பொதுவாக திருக்கோயிலை சுற்றி தேர் வலம் வர சுமார் ஐந்து முதல் ஆறு மணி நேரம் ஆகும். எங்கள் வேதாரண்யேஸ்வரர் ஆலயத்தை சுற்றி வந்து அவருடைய சிம்மாசனத்தில் அமர்ந்ததும் அவர்களுக்கு தீபாராதனை காட்டி பலவிதமான அபிஷேகங்களும் ஆராதனைகளும் நடத்துவார்கள். அப்பொழுது கோவில் வளாகத்திலுள்ள பக்தர்களை காணும்போது கடல்போல் காட்சியளிப்பர். மேலும் இந்த திருவிழாவை முன்னிட்டு கோவிலை சுற்றி நான்கு திசைகளிலும் பலவிதமான கடைகள் தற்காலிகமாக உதயமாகி இருக்கும். அங்கு சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அவர்களுக்கு வேண்டிய அனைத்து பொருட்களையும் வாங்கி செல்வர். இறுதியாக வேதாரண்யேஸ்வரரை காணவந்த அனைத்து பக்த கோடிகளும் தங்களது நேர்த்தி கடனை செலுத்தி விட்டு வீடு திரும்புவார்கள். அன்றைய தினத்தில் இருந்து எங்கள் வேதாரண்யேஸ்வரரை மறுபடியும் தேரில் ராஜ அலங்காரத்தில் பார்ப்பதற்காக மக்கள் ஒரு வருடம் காத்திருப்பார்கள்.

# இன்றும் சித்த[ரும்] மருத்துவமும்

* ஓம்சக்தி

என் பெயர் ஓம்சக்தி. எங்கள் ஊர் விழுந்தமாவடி, இது நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூர் வட்டத்தில் கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கும் ஓர் ஊராட்சி. இந்த நவீன காலத்தில் மருத்துவத் துறையில் எவ்வளவோ முன்னேற்றம் வந்திருந்தாலும், ஆயுர்வேதம், யோகா, யுனானி, ஹோமியோபதி என எவ்வளவோ மருத்துவ முறைகள் இருந்தாலும், எங்களது ஊரில் இன்றும் கூட சித்த வைத்தியம் பின்பற்றப்பட்டு வருகிறது. ஏனென்றால் எங்கள் சுற்றுவட்டார பகுதிகளில் இந்த காலகட்டத்திலும் குறிப்பிடத்தக்க சித்த மருந்துகள் கிடைக்கின்றன. மேலும் சித்த வைத்தியம் பார்க்க கூடியவர்களும் எங்கள் பகுதிகளில் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். எங்கள் பகுதியில் வாழும் மக்கள் சித்தர்கள் மீதும், சித்த மருத்துவத்தின் மீதும் மிகுந்த நம்பிக்கை வைத்து அதனை பின்பற்றி வருகின்றனர். எங்களது நாகப்பட்டிணம் மாவட்டத்தில் இருக்கும் கோரக்கர் சித்தர் கோவிலும், அதன் வழிபாட்டு முறைகளுமே சான்றாக உள்ளன.

எங்கள் ஊரில் வாழும் மக்களும் அவர்களுக்குத் தெரிந்த வட்டாரங்களில் சித்த மருத்துவத்தின் மகிமையையும் அதன் அடிப்படையையும் உணர்ந்திருப்பதால் பெரும்பாலான மக்களிடையே சித்தமருத்துவம் நம்பிக்கையான மருத்துவ முறையாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சித்த வைத்திய முறையில் ஈடுபட்டு வருகின்ற மக்களும் உடலில் நாள்பட்ட உபாதைகள் தீர்வதாலும், எந்த ஒரு பக்கவிளைவுகளும் ஏற்படாவண்ணம் இருப்பதாலும், எங்கள் பகுதியில் வாழும் மக்கள் சித்த மருத்துவத்தின் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு இன்று வரையில் பின்பற்றி வருகின்றனர்.

இதனுடன் தமிழக அரசும் எங்கள் ஊரில் ஒரு சித்த வைத்திய சாலையை நிறுவி எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவை வழங்கி வருகிறது. இங்குள்ள மக்களில் சிலர் கைகால் வலி ஏற்பட்டு மிகவும் சோர்ந்து எங்கள் சித்த வைத்திய சாலைக்கு வருவர். எங்கள் ஊரில் இதற்காகவே




* ஓம்சக்தி, வேதாரண்யம்



பிரத்தியேகமான கசாயம் இன்று வரையிலும் கடைபிடித்து வருகிறோம். இந்த கஷாயத்தை சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை அனைத்து வயதினரும் பருகுகின்றனர் இந்த கசாயத்தை பருகி வருவதால் உடலில் எந்த ஒரு உடல் உபாதைகளோ பக்க விளைவுகளோ ஏற்படுவதில்லை.

மேலும் இது போல் சிறு குழந்தைகளுக்கு அடிக்கடி வரக்கூடிய சளி, இருமல், காய்ச்சல், தலைவலி போன்ற உடல் உபாதைகளுக்கும் ஆடாதொடை, தூதுவளை போன்ற மூலிகைகள் மூலம் குணப்படுத்த பட்டு வருகின்றது. இதுபோல கீழாநெல்லி, தூதுவளை, நிலவேம்பு, மணத்தக்காளி, பொன்னாங்கண்ணி, கரிசலாங்கண்ணி, அருகம்புல், துளசி, ஆடாதோடை, முடக்கத்தான், முசுமுசுக்கை, சங்கு இலை, பப்பாளி, ஆனை நெருஞ்சி, மூக்கரட்டை போன்ற பல்வேறு வகையான மூலிகைச் செடிகளும் எங்கள் ஊரில் பரவலாக கிடைக்கிறது. ஆவைகளின் மருத்துவ குணங்கள் மக்களுக்கு மருந்துகாக பயன்பட்டுவருகிறது.

இத்தகைய சூழல் அமையப் பெற்று இருப்பதால் எங்கள் பகுதிகளில் வாழும் பெரும்பாலான மக்கள் ஆங்கில மருத்துவத்தை தேடிச் செல்வதற்கு முன்பாக பாட்டி வைத்தியம் என்று அழைக்கக்கூடிய இந்த சித்த வைத்தியத்தை இன்றும் நம்பிக்கை வைத்து பின்பற்றி வருகின்றனர். இதேபோல் பல்வேறு விதமான பூச்சிக்கடிகளுக்கும் எங்கள் ஊரில் வைத்தியம் பார்க்கக் கூடியவர்கள் இன்றளவும் தொன்றுதொட்டு வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறாக இந்த நவீன காலத்திலும் எங்களது பகுதியில் சித்த மருத்துவத்தின் மகிமை ஆனது இன்றளவும் குறையாமலேயே எங்கள் மக்களிடத்தில் இரண்டறக் கலந்து வருகிறது.

# புளியமரம் ஒன்றும் எளிய மரமல்ல


* ரகுணா

என் பெயர் ரகுணா. எனக்கு நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேட்டைக்காரனிருப்பு தான் சொந்த ஊர். எனக்குத் தெரிந்த வரையில் மற்ற ஊர்களில் இருந்து எங்கள் ஊருக்கு வந்து தான் சமையலுக்கு புளி வாங்குவார்கள். ஆனால் எங்க ஊரில் நிலைமை அப்படியில்லை காரணம் எங்கள் சொந்த ஊரிலேயே தொன்று தொட்டு புளிய மரம் வளர்த்து வருகிறோம்.

இன்றைய மொபைல் உலகில், புளிய மரத்தை எல்லோரும் பார்த்து இருப்போமா என்று கேட்டால், அது எனக்கு தெரியாது. ஆனால் புளியமரத்தை தூரத்திலிருந்து பார்க்கும்போது ஒரு ஆலமரத்தை போலதான் காட்சியளிக்கும். இன்றும் கூட எங்கள் ஊரில் உள்ள சிறுவர்கள் புளிய மரத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடுவது உண்டு, ஊஞ்சல் என்றவுடன் கண்ணாடி ஊஞ்சலோ அல்லது மர ஊஞ்சலோ என்று நினைத்துவிட வேண்டாம். நாங்கள் எங்கள் அம்மாவின் புடவையையே புளிய மரத்தில் சங்கிலியாக கட்டி கார் மற்றும் சைக்கிள் டயர்களை கொண்டு ஊஞ்சல் கட்டி விளையாடுவோம். இன்னும் சில சிறுவர்கள் எங்கள் ஊரில் இலவசமாக கிடைக்கும் வைக்கோலை சங்கிலியாக பயன்படுத்தி வெறும் கயிறு மற்றும்



* ரகுணா, வேட்டைக்காரனிருப்பு



பலகை போன்ற பொருட்களைக் கொண்டும் ஊஞ்சல் விளையாடுவார்கள். வெகுசிலர் புளியங்கொட்டை களை எடுத்து இரண்டாகப் பிளந்து மகுடம் சம்பா என்ற விளையாட்டை விளையாடுவார்கள். பெருவாரியான புளியமரத்தில் பொன்வண்டுகள் காணப்படும் அதை நாங்கள் பிடித்து ஒரு கண்ணாடி குவளையில் அடைத்து வைத்து விளையாடுவதும் உண்டு.

மரங்களில் வாழை போன்ற மரங்களின் அனைத்து பாகங்களும் அனைவருக்கும் பயன்படுகிறது என்று எண்ணுவது தவறு. புளிய மரத்தின் அனைத்து பாகங்களும் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் பயனுள்ளதாகவே உள்ளது. புளிய மரத்தில் இருந்து சமையலுக்கு பயன்படுத்தப்படும் புளி மட்டும் தான் கிடைக்கும் என்று எண்ணி விடாதீர்கள், இதைத்தவிர புளிய மரத்தில் இருந்து கிடைக்கும் குச்சிகளும் மரத் துண்டுகளும் வீட்டில் சமையலுக்கு அடுப்பு எரிக்க விறகு கட்டையாக பயன்படுத்தப்படுகிறது. அதனுடன் புளியமரத்து இலைகளை ஆடு மாடுகளுக்கு பசுந்தீவனமாக கொடுத்து வருகின்றனர். மேலும் எங்கள் பகுதியில் கால்களில் சேற்றுப்புண் வந்தால் புளியமர இலைகளைப் பறித்து வெந்நீரில் வேகவைத்து அதனுடன் சிறிதளவு உப்பு சேர்த்து நன்கு வேக வைத்து வெதுவெதுப்பான சூழ்நிலையில் கால்களில் சேற்றுப்புண் இருக்கும் பகுதியில் இரண்டு மூன்று நாட்கள் வைத்து வந்தால் சீக்கிரம் குணமாகும்.

சிறுவர் சிறுமியர் புளியங்கொட்டையில் பல்லாங்குழி விளையாடுவார்கள் இதுதவிர புளியங்கொட்டைகளை எடுத்து நன்கு வறுத்து சாப்பிடுவார்கள். கூடுதலாக வறுத்த புளியங்கொட்டைகளை எடுத்து உரலில் இடித்து வரும் தூளை வெள்ளத்தோடு கலந்து உருட்டி சாப்பிடுவார்கள். இன்னும் சிலர் புளியங்கொட்டைகளை இரவு நேரங்களில் தண்ணீரில் நன்கு ஊறவைத்து அதிகாலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நீர் எரிச்சல் குணமாக்க படுவதால் அதனைத் தொடர்ந்து சாப்பிட்டு வருகின்றனர்.

இத்தகைய வளமிக்க புளியமரங்கள் எங்கள் ஊரில் சில குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றது. புளிய மரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய புளியங்காய்களை அடித்து உடைத்து உருட்டி அரிந்து தருவதற்கு ஒரு கிலோவிற்கு பத்து ரூபாயும், அவ்வாறு கிடைத்த புளியை சுற்றுவட்டாரங்களில் கடைகளிலோ அல்லது வாரச்சந்தைகளிலோ கொடுக்கும் போது ஒரு கிலோ நூறு ரூபாய் என்று விற்பனை செய்து வருகின்றனர். மேலும் புளியை உடைத்து எடுக்கக்கூடிய புளியங்கொட்டைகளை ஒரு மரக்கால் ரூ. 50 என்றும் விற்பனை செய்து வருகின்றனர். இதன் மூலமும் எங்கள் ஊரில் குறிப்பிட்ட சில குடும்பங்கள் பயன் அடைந்து வருகின்றனர். மேலும் சிலர் வீட்டில் புளியங்காயை எடுத்து சிறிதளவு உப்பு சேர்த்து சாப்பிடுவார்கள் அதேபோல் புளியம் பழத்தையும் எடுத்து இரண்டு எலுமிச்சை இலையை சிறிதளவு உப்புடன் சேர்த்து சாப்பிடுவதும் உண்டு.

இவ்வாறு எங்கள் பகுதி மக்கள் வாழ்வில் எங்கள் ஊரில் உள்ள புளிய மரங்கள் இரண்டற கலந்து, எங்கள் மக்களின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாகவும் மிக்க உறுதுணையாகவும் பழங்காலம் முதல் தொன்று தொட்டு இருந்து வருகிறது.

# எங்கள் ஊர் வங்கி

* மகாலிங்கம்

என் பெயர் மகாலிங்கம் நான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் விழுந்தமாவடி அருகே உள்ள வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி இருக்கிறது. எங்கள் பகுதியில் விழுந்தமாவடியை சுற்றி இருக்கும் 3 ஊர்களுக்கு ஒரு வங்கி தான் இருக்கிறது. இந்த வங்கியில் தான், வேட்டைகாரனிருப்பு, காமேஸ்வரம், விழுந்தமாவடி மற்றும் புதுப்பள்ளி ஆகிய 4 ஊர்களை சேர்ந்த மக்களும் வங்கி கணக்கு வைத்து இருக்கிறோம்.

இந்த வங்கியில் நகை கடன், விவசாய கடன், கல்விக் கடன், கால்நடை வளர்ப்பு கடன் என அனைத்து விதமான கடன்களுக்கும், இதர வங்கி பரிவர்த்தனைகளுக்கும் எங்கள் பகுதி மக்கள் இந்த வங்கியை நம்பி இருக்கின்றோம்.

சில தருணங்களில் எங்கள் ஊரில் உள்ள வங்கியில் மிகுந்த கூட்டநெரிசல் ஏற்படுவதால், மேற்கூறிய 3 மற்ற ஊர்களிலும் வங்கிக்கான மக்கள் சேவை மையம் வங்கியின் வணிக நிருபர்கள் வைத்து இயக்கி வருகிறது. இந்த மக்கள் சேவை மையம் மூலம் 100 நாள் வேலையில் ஈடுபட்டுவரும் மக்களுக்கும், மாத ஓய்வு ஊதியம் கிடைக்கும் நபர்களுக்கும், புதியதாக வங்கி கணக்கு தொடங்க நினைக்கும் மக்களுக்கும், வங்கிக் கணக்கில் சேமிப்பு செலுத்துவோருக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமைந்திருக்கிறது. இவ்வாறு செயல்படும் மக்கள் சேவை மையத்தில், வங்கியின் அனைத்து வேலைநாட்களிலும் ஒரு நாளைக்கு ரூ. 25,000 வரை பணம் பரிவர்த்தனைகள் செய்யலாம். இத்தகைய மக்கள் சேவை மையத்தின் வழியே பிற வங்கி கணக்குகளுக்கும் பண பரிவர்த்தனைகள் செய்யலாம்.

ஒரு காலத்தில் எங்கள் ஊரில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் தான் பணப்பரிவர்த்தனை செய்யக்கூடியதாக இருந்தது, ஆனால் இப்போது எங்கள் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் இந்த வங்கியை நம்பியிருக்கிறார்கள். காரணம் அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்புக்கு நிகரான வட்டி விகிதம் வங்கியை காட்டிலும் குறைவாக உள்ளதால் எங்கள் பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் இந்த வங்கியை நாடுகின்றனர். மேலும் அஞ்சல் அலுவலகத்தை விட வங்கியில் அதிகக் கடன் பெற முடியும் இதுவும் ஒரு முதன்மையான காரணமாக இருக்கிறது.

இதே போல் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொள்ள நினைக்கும் இளைஞர்களுக்கும் கல்விக்கடன் வழங்குவதாலும், விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் விவசாய கடன் வழங்குவதாலும் மக்கள் அனைவரும் இந்த வங்கியில் கணக்கு வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். எங்கள் ஊர் வங்கியில் சுமார் 35,000க்கும் மேற்பட்ட வங்கி கணக்குகள் பராமரிக்கப்பட்டுவருகின்றன. சுமார் 700க்கும் மேற்பட்ட ஏழை மாணவர்கள் எங்கள் ஊர் வங்கியின் மூலம் கல்விக்கடன் பெற்றுள்ளனர். அதுமட்டுமல்லாமல் சுமார் 16,000க்கும் மேற்பட்ட விவசாயக்கடன்களும் அளிக்கபட்டுள்ளன. மேலும் சுமார் 2,500க்கும் மேற்பட்ட ஏழை பெண்கள் எங்கள் ஊர் வங்கி கிளையில் கடன் பெற்று ஆடு மற்றும் மாடு வாங்கி தொழில் செய்து வருகின்றனர். சுமார் 21,000க்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்கள் எங்கள் ஊர் வங்கியின் மூலம் நகைக்கடன் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




* மகாலிங்கம், விழுந்தமாவடி

# எங்கள் ஊர் பூக்கள் – ஊரும் மலரும்

* **அரிப்பிரியா**

பூக்கள் என்று சொன்னாலே பிடிக்காத பெண்கள் எவருமில்லை. பூக்கள் வளராத மண்ணும் இல்லை, தலையில் பூக்கள் வைக்காத பெண்ணும் இல்லை. எங்கள் ஊர் மண்ணிற்கு ஏற்ற பூக்களைப் பற்றி நான் உங்களுக்கு இந்த கட்டுரை வாயிலாக சொல்ல விரும்புகிறேன்.

எங்க ஊர் மண்ணுக்கு ஏற்றார்போல் கனகாம்பரம், செவ்வந்தி ,செம்பருத்தி, மல்லிகை, அலரி போன்ற பூச்செடிகள் அதிகளவில் இருக்கின்றன. அலரிப்பூவை பெண்கள் தலையில் சூடவில்லை என்றாலும் சாமிக்கு மாலையாக கட்டி போடக்கூடிய பூக்களில் மிக முக்கியமான ஒன்று ஆகும்.

எங்கள் பகுதிகளில் செவ்வந்திப் பூக்கள் மாலையாக கட்டி விற்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் விற்பனைக்காகவே எங்கள் பகுதிகளில் அதிக அளவில் விளைவிக்க படுகின்ற பூக்களில் இதுவும் ஒன்று. செம்பருத்தி பூச்செடிகளின் இலைகளை பறித்து அரைத்து தலையில் தேய்த்து குளித்தால் உடல் வெப்பத்தை தணிப்பதோடு தலைமுடியை நன்கு வளர செய்யும். தினந்தோறும் ஒரு செம்பருத்தி பூவை சாப்பிட்டு வந்தால் இதயத்திற்கு நல்லது, மேலும் இந்தப் பூக்கள் ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது.

தமிழகமெங்கும் பொதுவாக விற்பனை செய்யக்கூடிய பூக்களில் கனகாம்பரமும் ஒன்று. கனகாம்பரம் பூக்களின் விலையும் சற்று அதிக அளவில் இருக்கும். பெண்கள் அதிகமாக விரும்பும் மலர்களில் கனகாம்பரமும் ஒன்று. இது மனமற்ற மலராக இருந்தாலும் இந்த மலரை வேண்டாம் என்று சொல்லாத பெண்மனம் ஒன்றுகூட இல்லை.

பெண்களின் மனதிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கக்கூடிய மலர்களில் ஒன்று மல்லிகை. எங்கள் ஊர் நன்றாக விளையும் மலர்களில் மல்லிகை முதன்மையானது. மேலும் மல்லிகைப்பூவிற்கு நல்ல விலை கிடைக்கும் என்பதால் எங்கள் பகுதிகளில் அதிக அளவில் மல்லிகை பூக்கள் சாகுபடி செய்து வருகின்றனர்.

நான் மேலே குறிப்பிட்ட பூக்களுடன் சிலவிதமான அழகிய செடிகளும் எங்கள் ஊர் பகுதிகளில் ஆங்காங்கே வளர்க்கப்பட்டு வருகின்றன. ஆங்கில மாத காலண்டரில் டிசம்பர் என்ற மாதம் பற்றி அனைவரும் தெரிந்து வைத்திருப்போம். அதேபோல் எங்கள் பகுதிகளில் டிசம்பர் பூக்கள் என்று ஒரு வகை மலர் இருக்கிறது இது டிசம்பர் மாதத்தில் மட்டும் தான் பூக்கும் தன்மை கொண்டதாக இருக்கிறது. அதனாலேயே அதற்கு டிசம்பர் பூ என்று பெயரிடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதேபோல் ரோஜா பூக்களும் எங்கள் மண்ணில் ஓரளவிற்கு வளரும் பூவாக இருந்து வருகிறது.

இவ்வாறாக எங்களுடைய பகுதிகளில் பூக்களும் அதன் முக்கியத்துவமும் இருந்து வருகிறது. மனித வாழ்விலும் பிறப்பு முதல் இறப்பு வரை பூக்கள் முக்கியமான பங்கு ஆற்றி வருகின்றன.



* **அரிப்பிரியா**, வேட்டைக்காரனிருப்பு



## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.

மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org